# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 40
ஜனவரி 2012

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்மராஜா**

## நீதிமொழிகள்

1951 சோம்பேறியாயிராதே; எறும்பின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள்; அது கோடைக்காலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்து வைக்கிறது. (6:6,8)

1952 நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய்? எப்பொழுது உன் தூக்கத்தை விட்டு எழுந்திருப்பாய்? – சோம்பேறியாயிராதே (6:9)

1953 சோம்பற்கையால் வேலை செய்யாதே; ஏழையாவாய் (10:4)

1954 சுறுசுறுப்புள்ளவனாயிரு; உன் கை செல்வத்தை உண்டாக்கும் (10:4)

1955 கோடைக்காலத்தில் சேர்த்து வை (10:5)

1956 அறுப்புக்காலத்தில் தூங்காதே (10:5)

1957 ஜாக்கிரதையுள்ளவனாயிரு; சோம்பேறியாயிராதே (12:24,27; 13:4)

1958 சோம்பலாயிராதே; அது தூங்கி விழப்பண்ணும் (19:15)

1959 சோம்பேறியாயிராதே (19:24); அவன் குளிருகிறதென்று உழமாட்டான் (20:4)

1960 சோம்பேறியாயிராதே; சோம்பேறியின் கைகள் வேலை செய்யச் சம்மதியாததினால் அவன் ஆசை அவனைக் கொல்லும் (21:25)

1961 சோம்பேறியாயிராதே; சோம்பேறி வெளியிலே சிங்கம், வீதியிலே கொலையுண்டேன் என்று சொல்லுவான் (22:13)

1962 தூக்கம் கந்தைகளை உடுத்துவிக்கும் (23:21)

1963 சோம்பேறியாயிராதே; கதவு கீழ்முனையில் ஆடுகிறது போல சோம்பேறியும் படுக்கையில் ஆடிக் கொண்டிருக்கிறான் (26:14)

1964 இச்சகமான வார்த்தைகளைப் (Seductive words) பேசும் பரஸ்திரீக்கு (விலைமகளுக்கு) உன்னை விலக்கிக் காத்துக்கொள் (2:17, 7:4)

1965 உன் வழியை பரஸ்திரீக்குத் தூரப்படுத்து; அவளுடைய வீட்டின் வாசலைக் கிட்டிச் சேராதே (5:8)

1966 உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு. அவளே நேசிக்கப்படத்தக்க பெண்மானும் அழகான புள்ளிமானும் போலிருப்பாளாக (5:19)

1967 நீ பரஸ்திரீயின் மேல் மயங்கித் திரியாதே (5:20)

1968 உன் இருதயத்திலே துன்மார்க்க ஸ்திரீயின் அழகை இச்சியாதே; அவள் தன் கண்ணிமைகளினால் உன்னைப் பிடிக்கவிடாதே (6:25)

1969 பிறனுடைய மனைவியினிடத்தில் பிரவேசியாதே; அவளைத் தொடாதே; ஆக்கினைக்குத் தப்பாய் (6:29)

1970 ஸ்திரீயுடனே விபச்சாரம் பண்ணுகிற மதிகெட்டவனாயிராதே; அப்படிச் செய்தால் நீ உன் ஆத்துமாவைக் கெடுத்துப் போடுகிறாய் (6:32); வாதையையும் இலச்சையையும் (dishonour and beat) அடைவாய்; உன் நிந்தை (disgrace) ஒழியாது (6:32,33)

1971 பரஸ்திரீயின் இனிய சொற்களில் வசப்படாதே (7:21)

1972 உன் கிணற்றிலுள்ள தண்ணீரையும், உன் துரவில் ஊறுகிற ஜலத்தையும் பானம்பண்ணு, உன் ஊற்றுகள் வெளியிலும் உன் வாய்க்கால்கள் வீதிகளிலும் பாய்வதாக (5:15,16)



**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி**

கிழவனேரி கிராமத்தில் சகோதரி. ராஜேஸ்வரிக்கு கர்த்தர் சுகப்பிரசவத்தில் அழகான ஆண் குழந்தை கொடுத்ததற்காக... புதிதாக ஒரு நபர் ஆராதனைக்கு வந்தார்கள். அவர்கள் ஜெபித்த காரியத்தில் அற்புதம் செய்ததற்காக... நடந்த வீட்டு வேலைகளுக்காக....

## செய்திகள்

- தமிழகத்தில் Indian Institute of Management - IIM - திருச்சியில் 160 ஏக்கர் பரப்பில் தயாராகி வருகிறது. 2012-14 ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை அனைத்திந்திய பொது நுழைவுத் தேர்வு மூலம் நடக்க இருக்கிறது. இந்தியாவின் 11வது IIM கல்வி நிலையமாக தமிழகத்தில் முதலாவது ஆரம்பிக்கப்படுகிறது.
- தமிழகத்தில் 863 இலவச HIV ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் நம்பிக்கை மையங்கள் என்ற பெயரில் இயங்கி வருகிறது.
- தமிழக அரசு தேசிய கிராமப்புற சுகாதார திட்டத்துடன் இணைந்து 231 தமிழக ஆரம்ப சுகாதார மையங்களில் நவீன இரத்த சேமிப்பு மையங்களை அமைத்துள்ளது.
- ரூ. 400 கோடி செலவில் பெருநகர் இரத்த வங்கி மற்றும் பிளாஸ்மா பகுத்தாய்வு மையம் சென்னை அண்ணா நகரில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையில் அமைக்கப்பட உள்ளது.
- பதிவு பெற்ற இரத்த சேமிப்பு மையங்கள் 164 தமிழ்நாட்டில் உள்ளன. அரசு உரிமம் பெற்ற 272 இரத்த வங்கிகள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன.
- HIV க்கான கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் தமிழகத்தில் 41 உள்ளன. மேலும் திருப்பத்தூர் மணப்பாறை ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட உள்ளன.
- HIV க்கான தொடர் சிகிச்சை மையங்கள் 84 தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் 54, 416 பேர் இலவச கூட்டு மருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.

நம்முடைய ஆலயத்தின் விசுவாசியின் மகன் பிள்ளை (பேத்தி) திடீரென்று இரவு தூங்கும்போது காணவில்லை. யாரோ பிள்ளையை கடத்தி விட்டார்கள். இவர்கள் விழித்து பார்த்தபொழுது பிள்ளையில்லை என்று தெரிந்து போலீசில் புகார் செய்தார்கள். போலீஸ் நடுசாமத்தில் காட்டிற்குள் டார்ச் அடித்து தேடினார்கள். தேடும்போது பிள்ளையை ஒரு குழிக்குள் போட்டுவிட்டு ஓடி விட்டார்கள். அந்தப் பிள்ளை வீட்டிற்கு 5 மணிக்கு சேர்ந்தாள். தேவன் இந்த பிள்ளையை அற்புதமாக காப்பாற்றி தந்ததற்காக.....

சகோதரி பேச்சி வீடு கட்ட தேவைகள் சந்திக்கப்பட்டதற்காக.....

**ஈரோடு மாவட்டம்**

பணித்தளம் : **ஊத்துக்குளி**

வடக்கன் பாளையத்தில் பெருமாள் சாமி இவருக்கு வண்டியில் செல்லும்போது கீழே விழுந்துவிட்டார். இவருக்கு கை, தலையில் அடிபட்டுவிட்டது. ஆஸ்பத்திரி சென்று வந்தார். இவருக்காக ஜெபித்தோம் தேவன் சுகம் கொடுத்ததற்காக...

சகோதரர் முகைதீன் இவர் உடல் நலக்குறைவால் இவருடைய சரீரம் நாளுக்குநாள் பலவீனமடைந்திருந்தார். ஜெபித்தோம் தேவன் சுகம் கொடுத்ததற்காக...

**திருப்பூர் மாவட்டம்**

பணித்தளம் : **பொங்கலூர்**

ஆலயத்திற்கு நிலம் கிரயம் செய்ய கர்த்தர் கிருபை செய்ததற்காக ஆராதனைக்கு வந்து கொண்டிருக்கும் சகோதரர்கள் லட்சுமி, லீலாவதி ஆகியோர் வீட்டில் வைக்கப்பட்டிருந்த விக்கிரகங்களை எடுத்து வெளியே வீசியுள்ளனர். அவர்களுக்காக... சகோதரி. சசிகலா ஆண்டவரை ஏற்றுக்கொள்ள...

தொட்டிப்பாளையம் ஜெபக்கூட்டத்திற்கு வரும் 85 வயதான தாயார் சந்தைக்கு சென்றபோது 1400 ரூ தொலைத்துவிட்டார்கள். பின் அந்த தாயார் ஆண்டவரே உம்மை விசுவாசிக்கிற எனக்கு அந்த பணத்தை நீர் தர வேண்டும் என்று ஜெபித்துவிட்டு திரும்பிப்போய் பார்த்தபின் கூட்ட நெரிசலிலும் அந்தப்பணம் அப்படியே கிடைக்க கர்த்தர் கிருபை செய்ததற்காக... ஊழியர் மனைவிக்கு பரிபூரண சுகத்திற்காக

**திண்டுக்கல் மாவட்டம்**

பணித்தளம் : **தொப்பம்பட்டி**

சகோதரி. விஜயாவுக்கு நீண்ட நாட்களாக காணப்பட்ட இருமல், சளிப்பிரச்சனைகள் குணமானதற்காக... சகோ. தினேஷ் குமாருக்கு விபத்தின் மூலம் ஏற்பட்ட கால்வலி சுகமானதற்காக....

**திருச்சி மாவட்டம்**

பணித்தளம் : **மஞ்சம்பட்டி**

கடந்த நவம்பர் மாதத்தில் ஐந்து கிராமங்களில் கைபிரதி கொடுத்ததற்காக... சகோ. ஜெரால்ட் அவர்கள் குடும்பத்தினருக்கு தேவன் கட்டி கொடுத்துள்ள புதிய வீட்டிற்காக... சகோ. நேசமணி – சலோமிக்கு தேவன் நடத்தி தந்த திருமணத்திற்காக...

மஞ்சம்பட்டி சகோதரி வனஜா இவர்களுக்கு 17 ஆண்டுகளுக்கு பின் கர்ப்பம் தரிக்கச் செய்ததற்காக... சகோ. பிலேந்திரன் அவர்கள் மகள் சாராளுக்கு தேவன் கட்டி கொடுத்துள்ள புதிய வீட்டிற்காக.... ஆலய பிரதிஷ்டை நவம்பர் 1ம் தேதி நடத்தி தந்ததற்காக... சகோ. செல்வின் அவர்களுக்கு பணியிடமாற்றம் சொந்த மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைக்கச் செய்த தேவாதி தேவனைத் துதிப்போம்.



1973 வேதமே வெளிச்சம்; அது உன்னைத் துன்மார்க்க ஸ்திரீக்கும் இச்சகம் பேசும் நாவையுடைய பரஸ்திரீக்கும் விலக்கிக் காக்கும் (6:23,24)
1974 வெள்ளியைச் சம்பாதிப்பதிலும் புத்தியைச் சம்பாதி, அது எவ்வளவு மேன்மை (16:16)
1975 கிண்டி விடாதே (16:27)
1976 புரட்டு நாவுள்ளவனாயிராதே; அவன் தீமையில் விழுவான் (17:20)
1977 மரணத்துக்கு ஒப்புவிக்கப்பட்டவர்களை கொலையுண்ணப் போகிறவர்களையும் விடுவிக்கக் கூடுமானால் விடுவி. (24:11)
1978 ஞானத்தை அறிந்து கொள்; அது உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்; அதைப் பெற்றுக் கொண்டால் முடிவில் உதவும் (24:14)
1979 காரியத்தை மறைப்பது தேவனுக்கு மேன்மை; காரியத்தை ஆராய்வதோ ராஜாக்களுக்கு மேன்மை (25:2)
1980 ராஜாவின் முன்னின்று துஷ்டரை நீக்கி விடு, அப்பொழுது அவனுடைய சிங்காசனம் நீதியினால் நிலை நிற்கும் (25:5)
1981 உன் எஜமானுக்கு உண்மையான ஸ்தானாபதியாயிருந்து (reliable messenger) அவனுடைய ஆத்துமாவைக் குளிரப்பண்ணு (25:13)
1982 நீண்ட பொறுமையுள்ளவனாயிரு; அதினால் பிரபுவையும் (ruler) சம்மதிக்கப்பண்ணலாம் (25:15)
1983 உன் சத்துரு பசியாயிருந்தால் , அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு; அவன் தாகமாயிருந்தால், குடிக்கத் தண்ணீர் கொடு; அதினால் நீ அவன் தலையின் மேல் எரிகிற தழல்களைக் குவிப்பாய்; கர்த்தர் உனக்கு பலனளிப்பார் (25:21,22)
1984 சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்; சத்துரு இடும் முத்துங்களோ வஞ்சனையுள்ளவைகள் (27:6)
1985 உன் சிநேகிதனை உட்கருத்தான ஆலோசனையினால் பாராட்டு; அதுஅவனைக் களிப்பாக்கும் (27:9)
1986 அத்திமரத்தைக் காக்கிறவன் அதின் கனியைப் புசிப்பான்; உன் எஜமானைக் காத்துக்கொள்; கனமடைவாய் (27:18)
1987 உனக்கு உண்டாகும் புகழ்ச்சியே உனக்குச் சோதனை (27:21)
1988 உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்து கொள் (27:23)
1989 உன் மந்தைகளின் மேல் கவனமாயிரு (27:23)
1990 நீதிமானாயிரு; சிங்கத்தைப் போலே தைரியமாயிருப்பாய் (28:1)
1991 நீ வேதப்பிரமாணத்தைக் கைக்கொள்வதால், துன்மார்க்கரோடே போராட வேண்டிருக்கும். (28:4)
1992 தரித்திரனாயிருந்தாலும் நேர்மையாய் நட (28:6)
1993 விவேகமுள்ளவனாயிரு (28:7)
1994 எப்பொழுதும் கர்த்தருக்குப் பயந்திரு. (28:14)
1995 உண்மையுள்ள மனுஷனாயிரு; பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவாய் (28:20)
1996 தரித்திரருக்குக் கொடு; தாழ்ச்சியடையாய் (28:27)
1997 அடிக்கடி கண்டிக்கப்பட்டும் பிடிவாதமுள்ளவனாயிராதே; அது அழிவிற்கான செயல் (29:1)
1998 பாடி மகிழ் (29:6)
1999 உத்தமனுடைய பிராணனைக் காப்பாற்று (29:10)
2000 ஏழைகளுடைய நியாயத்தை உண்மையாய் விசாரிக்கிற ராஜாவாயிரு; உன் சிங்காசனம் என்றும் நிலைபெற்றிருக்கும் (29:14)

# "உங்கள் இரட்சிப்பைக் கொண்டாடுங்கள்"

Dr. P. செல்வராஜ், கோவை (மொழி பெயர்ப்பு)

எழுதியோர் : ரேண்டி & சீரி கில்பர்ட் (www.contact.tr)

நீங்களும் நானும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குரியவர்களாக இருக்கிறோமென்றால் அதற்குக் காரணம் தேவனுடைய அன்பு. தூய ஆவியின் வல்லமையால் அவர் நம்மைத் தெரிந்து கொண்டார். தொடர்ந்து அவர் தம் அன்பின் உறவுக்குள் நம்மை ஈர்த்துக் கொண்டார். உங்களைப் பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் தேவன் என்னை நேசிப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

மக்களை சந்திப்பதில் தேவனுடைய அன்பு செயல்படுகிறது. நமக்குத் தகுதி இல்லாவிடினும் தேவன் நம்மைத் தெரிந்து கொண்டார். என்னைப் பொறுத்தவரை அது இயற்கைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. நான் காணாமற்போன ஆட்டுக்குட்டியைப் போலிருந்தேன். உங்கள் அனுபவமும் தேவனுடைய தன்மையை வெளிப்படுத்துவதாகத் தானிருக்குமென்று நம்புகிறேன். விசுவாசியாகிய நீங்கள் உங்களுடைய இரட்சிப்பைக் கொண்டாடுவது அவசியம். என்ன நடந்தது என்பதும் உங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த தொடர் அற்புதங்களும் உங்கள் சாட்சியில் இடம் பெற்றிருக்கும்.

ஒவ்வொரு ஓய்வுநாள் ஆராதனையிலும் நற்செய்தி அருளுரையாக வழங்கப்பட்ட சுவிசேஷ சபையில் நான் இருந்தேன். ஆனாலும், அந்த அருளுரையானது என் செவியை எட்டவில்லை. என் உள்ளம் பார்வையற்றதாக இருந்தது. என்னுடைய நிலையாமையில் இயேசுவை வெளியரங்கமாக அறிவிக்கும் விசுவாசிகள் சிலரை நான் சந்தித்தேன். அப்போது இயேசுதான் எனக்கு எல்லாம் என்பதை உணர்ந்தேன். எப்படியோ தேவன் என்னை என்னுடைய செவிகள் திறக்கப்பட்ட இடத்திற்குக் கொண்டுவந்தார். தேவனுடைய வார்த்தையின் சத்தியம் எனக்குத் தொடர்ந்து வழங்கப்பட்டது. விதை விதைக்கப்பட்டது. என்னுடைய நெருக்கத்தில் இயேசு என்னிடம் வந்து "என்னிடம் வா, நிலையான வாழ்வைப் பெற்றுக்கொள்வாய்" என்று கூறினார். நான் உடனடியாக "எனக்கு உதவும் "ஆண்டவரே" என்றேன். நான் இரட்சிக்கப்பட்டதோடு உயிருக்கு ஆபத்தான ஒரு கல்லீரல் நோயினின்று சுகம் அடைந்தேன். தூய ஆவியில் திருமுழுக்கு பெற்றேன். ஊழியத்திற்கு அழைக்கப்பட்டேன். இவை மூன்றும் ஒரே இரவில் நிகழ்ந்தன! அதுவும் என்னுடைய அறையிலேயே!! என்னுடைய உடலில் வியத்தகு மாற்றம் ஏற்பட்டது. கண்ணாடியில் பார்த்து நான் பெற்ற சுகத்தை நினைவில் இருத்தினேன்.

நீங்களும் நானும் தேவனுடைய கருணைக்கு உயிருள்ள சாட்சிகள். நாம் கல்வாரியின் கனி. தேவனுடைய கிருபை செயல்படுகிறது என்பதற்கு நாம் சாட்சியாக நிற்கின்றோம். நாம் 'சகோதரருக்குள்ளே முதற்பேறானவர்கள்"

இயேசு நம்மை "உலகின் ஒளி" என்று அழைத்தார். ஒருவரும் "விளக்கை ஏற்றி அதை மூடிவைக்கமாட்டார்கள்" என்றும் கூறினார். தேவையுள்ள மற்றும் இழந்து போன உலகிற்கு ஒளிவீச தேவன் நம்மை ஒரு உயர்ந்த இடத்தில் வைக்க விரும்புகிறார். தேவன் உங்களைத் தேடி வந்திருக்கிறார். இப்போது நீங்கள் அவருடைய விருப்பமாயிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட அன்புப் பரிசைப் பெற்ற நீங்கள் வாளாவிருக்கலாமா? உங்கள் இரட்சிப்பைக் கொண்டாடுங்கள்! தேவன் இதுகாறும் உங்களுக்குப் பாராட்டின நன்மைகளை நினைத்துப் பாருங்கள். உங்கள் வாழ்வில் அவர் செய்த அற்புதங்களை எண்ணிப் பாருங்கள். உங்கள் சாட்சியில் ஒரு பகுதியாக இருக்கும் ஒவ்வொன்றையும் நினைத்துப்பாருங்கள்.



பாதுகாத்துக் கொண்டதற்காக...

ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமையும் ஸ்ரீவைகுண்டத்தில் எந்த தடையும் இல்லாதபி இயேசுவோடு இனிய மாலை நடைபெற தேவன் உதவி செய்ததற்காக சாமுவேலுக்கு டைபாய்டு காய்ச்சலில் இருந்து தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்ததற்காக....

வாலிபர் ஜெபக்குழு ஆரம்பிக்க தேவன் உதவி செய்ததற்காக... சகோதரி சுப்புலட்சுமிக்கு திருமண காரியங்கள் நடைபெற தேவன் உதவி செய்ததற்காக...

பணித்தளம் : **திருக்களூர்**

சகோதரிகள் சுபா, பட்டு இவர்களுக்கு கர்த்தர் சுக பிரசவத்தை கொடுத்ததற்காக... திருக்களூர் பணித்தளத்தில் மருத்துவ முகாம் நடத்த கர்த்தர் கிருபை செய்ததற்காக...

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை**

இங்கு ஊழியம் செய்கிற சகோ. மோசஸ் சகோதரி. ரூபி அவர்களுடைய ஊழியங்களை ஆசீர்வதித்து அவர்களையும் அவர்களுடைய பிள்ளைகளையும் சுகத்தோடும், பெலத்தோடும் பிள்ளைகளின் படிப்பிலும் தேவன் செய்து வந்த நன்மையானவைகளுக்காக...

சகோதரி. ரூபியின் கர்ப்பப்பையில் உள்ள கட்டியை ஆப்பரேஷன் செய்து எடுக்க, சுகம் தந்ததற்காக... திருப்புளியங்குடி இங்கு கட்டிவரும் ஆலயத்தை இம்மட்டும் தடையின்றி கட்டவும், அதன் தேவைகளை சந்திக்கச் செய்ததற்காக...

பணித்தளம் : **ஆண்டாள்நகர்**

கடந்த 13-11-2011 அன்று ஞாயிற்றுக்கிழமை நமது சாட்சியின் ஆலயத்தில் பைத்து சிறுவர் முகாம் நடைபெற்றது. இதில் அருகில் உள்ள 65 சிறுபிள்ளைகள் கலந்து கொண்டு தேவாசீர்வாதம் பெற்றதற்காக...

ஊனமுற்றோர் காலனியில் வசிக்கும் சகோதரி பானுமதிக்கு திருமண காரியத்தை ஒழுங்குபடுத்தி கொடுத்ததற்காக... நடக்க முடியாதிருந்த சகோ. தங்கராஜுக்காக ஜெபித்தோம். தேவன் ஜெபத்தைக் கேட்டு நடக்க செய்ததற்காக...

சகோதரி. கமலா தேவநாம மகிமைக்காக பிளேயர் ஒன்று வாங்கி கொடுத்துள்ளார்கள். அவர்களுக்காக... நமது ஆலயத்தின் அருகில் இருக்கும் முதியோர் இல்லத்திலிருந்து மீண்டும் ஒரு தாயார் கடந்து வந்ததற்காக....

பணித்தளம் : **தாதன்குளம்**

இங்கு நடைபெற்ற சிறுவர் முகாமை நடத்தினோம். நல்லபடியாக நடத்த தேவன் கிருபை செய்ததற்காக.... தேவைகளை சந்தித்ததற்காக....

பணித்தளம் : **தூத்துக்குடி ரூரல்**

சகோதரி. ஜோதி என்ற தங்கைக்கு ஆசிரியை வேலை குலையன்கரிசலில் கிடைத்ததற்காக... சகோதரி. அன்னசுந்தரி என்ற சகோதரிக்கு தலைமை ஆசிரியையாக பதவி உயர்வு கிடைத்ததற்காக...

**திருநெல்வேலி மாவட்டம்**

சகோதரி இராஜாத்தியம்மாள் மருமகள் இரண்டாவது சுகபிரசவத்தில் ஆண்குழந்தை கர்த்தர் தந்ததற்காக... அவர்களின் இளையமகன் ராஜேஷ்க்கு திருமணத்தை கர்த்தர் வாய்க்கச் செய்ததற்காக....

பணித்தளம் : **வடமலாபுரம்**

## *தேவனைத் துதிப்போம்! வாருங்கள்!*

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **பண்டுதன்பட்டி**

சகோதரி. கலாவதி புதிய ஆட்டோ வாங்க தேவன் கிருபை கொடுத்ததற்காக... சிறுவர் முகாம் சிறப்பாக நடைபெற்றதற்காக...

சகோதரி. அன்னமேரிக்கு திருமணத்தடை நீங்கி திருமணம் நடைபெற்றதற்காக.... சகோதரி வனிதாவுக்கு கர்ப்பம் தரிக்க கிருபை செய்ததற்காக...

பணித்தளம் : **பழைய செந்நெல்குளம்**

நல்ல மழை கிடைத்ததற்காக... விசுவாசிகள் ரமேஷ், ஜெயா விவசாயம் நல்ல விளைச்சல் கிடைக்க...

பணித்தளம் : **ஜமீன்சல்வார்பட்டி**

சகோ. அய்யனார் அவர்களுக்கு 5 வருடமாக நடைபெற்ற வழக்கு ஒன்று முடிவடைந்து தீர்ந்ததற்காக... சகோதரி. முருகலட்சுமிக்கு ஆப்பரேஷன் செய்த இடத்தில் பழுது ஏற்பட்டு மருத்துவத்தால் கைவிடப்பட்டதை தேவசமூகத்தில் ஜெபித்தபோது கர்த்தர் பூரண சுகம் கொடுத்தார்.

சகோதரி. அமுதா குடும்பம், சகோ. தர்மலிங்கம் குடும்பம் தொடர்ந்து சபைக்கு வர கர்த்தர் உதவி செய்ததற்காக.... சகோ. சாமுவேல் ஐயா அவர்கள் தொடர்ந்து ஆலயத்திற்கு வர கர்த்தர் கிருபை பாராட்டியதால்

ஏழாயிரம்பண்ணை – நவம்பர் 7ம் தேதி நடைபெற்ற வாலிபர் முகாமில் அநேகர் கலந்து கொண்டனர். வாலிபர் முகாமை கர்த்தர் ஆசீர்வாதமாய் நடத்தி தந்ததற்காக... வாலிபர் முகாமில் கலந்து கொண்ட மாணவிகள் தேவனுடைய கூடாரத்தில் காலையிலும், மாலையிலும் வந்து ஜெபிக்கிறதற்காக...

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் : **புதுக்கோட்டை**

மீன்வளக்கல்லூரி விடுதி மாணவிகள் 3 பேர் ஞானஸ்நானம் எடுத்ததற்காக...

பணித்தளம் : **பண்ணைவிளை**

6-10-11ல் நடைபெற்ற சிறுவர் முகாமில் 320 பிள்ளைகள் கலந்து கொண்டதற்காகத் திருவழுதிநாடார் விளையில் ஆஷா என்ற தங்கையின் திருமணத்தை கர்த்தர் நிச்சயம் பண்ணிக் கொடுத்ததற்காக... ஜே.பி. ஹோமில் படிக்கிற பவித்திராவுக்கு நல்லசுகம் கிடைத்ததற்காக...

**தாளமுத்துநகர்** – சகோதரி. காசிக்கு கர்த்தர் கொடுத்த சுகத்திற்காக... மாதாநகர் பெண்கள் ஜெபக்குழுவிற்கு வருகிற பெண்களை கர்த்தர் அழைத்து வந்ததற்காக... சகோ. பிரின்ஸ் அவர்கள் திருமணம் சிறப்பாக நடந்தமைக்கு .... சிறுவர் முகாம் சிறப்பாக நடந்ததற்காக.....

பணித்தளம் : **பேட்மாநகரம்**

சகோதரி. ஜெமிமா பொன்மணி அவர்களுடைய மகள் திருமணம் நடைபெற தேவன் உதவி செய்ததற்காக..... 7-11-11 அன்று ஊழியத்தை முடித்து விட்டு நானும் (சகோ. ஜெரால்டு பிள்ளைகளும் இரவு வேளையில் வீடு திரும்பிக் கொண்டு இருந்தபோது மழை பெய்தபடியால் அருகில் இடி விழுந்தது. கர்த்தர் என்னையும், பிள்ளைகளையும்



# ஒருவரிடத்திலொருவர்

தொகுப்பு : திருமதி. பாலா ஜோசப்பின் ஆசீர்

1. நீங்கள் **ஒருவரிலொருவர்** அன்பாயிருங்கள், நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் **ஒருவரிலொருவர்** அன்பாயிருங்கள் – இயேசுவின் கட்டளை (யோவா. 13:34)
2. நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் **ஒருவரிலொருவர்** அன்பாயிருக்க வேண்டுமென்பதே இயேசுவின் கற்பனை (யோவா. 15:12)
3. சகோதர சிநேகத்திலே **ஒருவர்மேலொருவர்** பட்சமாயிருங்கள். (ரோ. 12:10) கனம் பண்ணுகிறதிலே **ஒருவருக்கொருவர்** முந்திக் கொள்ளுங்கள். (ரோமர் 12:10)
4. ஆகையால், என் சகோதரரே, நீங்கள் போஜனம் பண்ணக்கூடி வரும்போது **ஒருவருக்காக ஒருவர்** காத்திருங்கள்.
5. **ஒருவரையொருவர்** பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள் (1கொரி. 16:20)
6. அன்பினாலே **ஒருவருக்கொருவர்** ஊழியஞ் செய்யுங்கள். (கலா. 5:13)
7. நீங்கள் **ஒருவரையொருவர்** கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி **ஒருவராலொருவர்** அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். (கலா. 5:15)
8. வீண் புகழ்ச்சியை விரும்பாமலும் **ஒருவரையொருவர்** கோபமூட்டாமலும் **ஒருவர் மேல் ஒருவர்** பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம் (கலா. 5:26)
9. **ஒருவர்** பாரத்தை **ஒருவர்** சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். (கலா. 6:2)
10. அன்றியும், நாம் **ஒருவருக்கொருவர்** அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். (எபே. 4:25)
11. **ஒருவருக்கொருவர்** தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் **ஒருவருக்கொருவர்** மன்னியுங்கள். (எபே. 4:32)
12. சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் **ஒருவருக்கொருவர்** புத்தி சொல்லிக் கொண்டு (எபே. 5:19)
13. தெய்வபயத்தோடே **ஒருவருக்கொருவர்** கீழ்ப்படிந்திருங்கள் (எபே. 5:21)
14. மனத்தாழ்மையினாலே **ஒருவரையொருவர்** தங்களிலும் மேன்மையுள்ளவர்களாக எண்ணக்கடவீர்கள். (பிலி. 2:3)
15. **ஒருவருக்கொருவர்** பொய் சொல்லாதிருங்கள். லேவி. 19:11 (கொலோ. 3:9)
16. **ஒருவரையொருவர்** தாங்கி ஒருவர் பேரில் ஒருவருக்குக்குறைபாடு உண்டானானால் கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல **ஒருவருக்கொருவர்** மன்னியுங்கள். (கொலோ. 3:13)

17. சங்கீதங்களினாலும் ஞானப்பாட்டுகளாலும் **ஒருவருக்கொருவர்** போதித்து புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி; (கொலோ. 3:16)

18. நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய் நீங்களும் **ஒருவரிடத்தில் ஒருவர்** வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து (1தெச. 3:12)

19. நீங்கள் **ஒருவரிலொருவர்** அன்பாயிருக்கும்படிக்கு தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே. (1தெச. 4:18)

20. நீங்கள் **ஒருவரையொருவர்** தேற்றுங்கள். (1தெச. 4:18)

21. ஆகையால் நீங்கள் செய்து வருகிறபடியே **ஒருவரையொருவர்** தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள். (1தெச. 5:11)

22. உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் **ஒருவருக்கொருவர்** புத்தி சொல்லுங்கள். (எபி. 3:13)

23. சகோதரரே நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு **ஒருவருக்கொருவர்** விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார். (யாக். 5:9)

24. நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை **ஒருவருக்கொருவர்** அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். (யாக். 5:16)

25. சுத்த இருதயத்தோடே **ஒருவரிலொருவர்** ஊக்கமான அன்பு கூருங்கள். (1பேது. 1:22)

26. எல்லாவற்றிற்கும் மேலாக **ஒருவரிலொருவர்** ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள். (1பேது. 4:8)

27. முறுமுறுப்பில்லாமல் **ஒருவரையொருவர்** உபசரியுங்கள். (1பேது. 4:9)

28. **ஒருவரையொருவர்** அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள். (1பேதுரு 5:14)

29. அந்தப்படி, இளைஞரே மூப்பருக்கு கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் **ஒருவருக்கொருவர்** கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள். (1பேதுரு. 5:5)

30. நாம் **ஒருவரிலொருவர்** அன்பு கூர வேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது. (1பேதுரு 3:11)

---

### வாழ்த்துகிறோம்

நமது சாத்தூர் ரூரல் மிஷனெரி சகோ. ஸ்டீபன் 26-11-2011 அன்று சகோதரி திலகஜோதியுடன் திருமண உடன்படிக்கையில் இணைக்கப்பட்டார். தேவன் அவர்களை ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம். வாழ்த்துகிறோம்.



## ஜெபியரங்கள்

ஜனவரி

| | | | |
|---|---|---|---|
| 2 | அற்புதத்தின் மாலை | ஆலங்குளம் - நேரம்: மாலை 7 - 9 | |
| 4 | முழுஇரவு ஜெபம் | தேவனுடைய கூடாரம், ஏழாயிரம்பண்ணை | |
| 5 | அற்பதத்தின் மாலை | பாளையங்கோட்டை மாலை 6.30 - 8.30 | |
| 7 | அற்புத உபவாச ஜெபம் | ஸ்ரீவைகுண்டம் காலை 10 - 2 | |
| 7 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | சாத்தூர் | மாலை 4 - 6 |
| 8 | வாலிபர் முகாம் | இராஜபாளையம் CSI ஆலயம் காலை 11 - 4 | |
| 8 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | தூத்துக்குடி | மாலை 4 - 6 |
| 8 | சிறுவர் குதூகல முகாம் | பேட்மாநகரம் பணித்தளம் | |
| 10 | அற்புதத்தின் மாலை | திருவேங்கடம் | மாலை 6 - 8 |
| 11 | முழுஇரவு ஜெபம் | தலைமை அலுவலகம், தூத்துக்குடி | |
| 14 | அற்புத உபவாச ஜெபம் | மைப்பாறை | காலை 10 -2 |
| 14 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | விருதுநகர் | மாலை 4 - 6 |
| 15 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | ஏழாயிரம் பண்ணை | மாலை 4 -6 |
| 16 | குடும்ப மனமகிழ்ச்சி முகாம் | புதுக்கோட்டை CSI ஆலயம் | காலை 10 - 4 |
| 17 | அற்புதத்தின் மாலை | அம்பாசமுத்திரம் | மாலை 5 -7 |
| 21 | அற்புத உபவாச ஜெப நாள் | மஞ்சம்பட்டி | காலை 10 - 2 |
| 21 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | திருவேங்கடம் | மாலை 4-6 |
| 22 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | மஞ்சம்பட்டி | மாலை 4 - 6 |
| 22 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | சாயர்புரம் | மாலை 4 - 6 |
| 24 | 12வது ஆலய பிரதிஷ்டை & மிஷனரி இல்ல பிரதிஷ்டை முக்கூட்டுமலை | | |
| 25 | திறப்பின் வாயில் ஜெபம் | ஏழாயிரம்பண்ணை | |
| 26 | முகாம் | ஜெபவீடு, காட்டத்துறை | |
| 28 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | ஸ்ரீவைகுண்டம் | மாலை 4 - 6 |
| 28 | இயேசுவோடு இனிய வாலிபர் மாலை | சிவகாசி | மாலை 4 - 6 |
| 31 | கிருபையின் ஊழியங்கள் 25வது ஆண்டு நிறைவு ஸ்தோத்திர முகாம் காமராஜர் திருமணமண்டபம், பிரையண்ட் நகர், தூத்துக்குடி. | | |

---

## மிஷனெரி ஆலய மிஷனெரி இல்ல பிரதிஷ்டை

### புல்லக்கவுண்டன்பட்டி

கர்த்தரின் கிருபையால் விருதுநகர் மாவட்டம் புல்லக்கவுண்டன்பட்டி கிராமத்தில் நாம் கட்டியுள்ள மிஷனெரி ஆலயத்தின் குறைவு பணிகள் நிறைவு செய்யப்பட்டு, காம்பவுண்டு சுவர், கட்டப்பட்டதும் அல்லாமல், மிஷனெரி இல்லமும் கட்டி முடிக்கப்பட கர்த்தர் கிருபை செய்தார். இதற்கு தூத்துக்குடியை சேர்ந்த சகோ. ஜோபாய் அவர்கள் குடும்பத்தினர் மனமுவந்து தங்கள் குடும்ப சார்பாக காணிக்கை அளித்து இப்பணியை ஜெபத்துடன் தாங்கினர். தேவன் இக்குடும்பத்தினரை ஆசீர்வதிப்பாராக!

நிறைவு செய்யப்பட்ட இவைகள் யாவும் 2011 நவம்பர் 24ஆம் தேதி மாலை 5.30 மணிக்கு நமது கிருபையின் ஊழியங்களின் தலைவர் சகோ. ஜெபராஜ் அவர்கள் ஜெபத்துடன் பிரதிஷ்டை செய்து திறந்து வைத்தார்கள். தொடர்ந்து ஆலயத்தில் பிரதிஷ்டை ஆராதனையும் நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். எல்லா ஒழுங்குகளையும் சபை விசுவாசிகள் செய்தார்கள். மிஷனெரி சகோ. தாமஸ் அவர்களும் இணைந்து ஜெபத்துடன் செய்திருந்தார்கள்! தேவனுக்கே மகிமை!

கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும்.

**இஸ்ரவேல் புத்திரர் - கூட இருக்கும் கர்த்தர்**

கர்த்தராகிய நான் உங்கள் தேவன் என்று நீங்கள் அறிந்து கொள்ளும்படிக்கு, நான் நாற்பது வருஷம் உங்களை வனாந்திரத்தில் நடத்தினேன். உங்கள் மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவும் இல்லை. உங்கள் காலிலிருந்த பாதரட்சைகள் பழையதாய்ப் போகவும் இல்லை. உபா. 29:5

வனாந்திர வாழ்வு இஸ்ரவேலருக்கு 40 வருஷங்கள். 40 ஆண்டுகளும் வனாந்திரத்தில் கர்த்தர் அவர்களோடு இருந்து அவர்களை நடத்தின விதம் குறித்துதான் மேலே உள்ள வசனம் கூறுகிறது. நெகேமியா 9:12, 19-21 வசனங்கள் தேவன் அவர்களோடு கூட வனாந்திரத்தில் இருந்து, கூடவே சென்று நடத்தின விதம் அழகாக விளக்கப்பட்டுள்ளது. அந்த தேவன் இந்த ஆண்டு மாத்திரமல்ல காலம் முழுவதும் கூட இருந்து குறைவின்றி திருப்தியாய் மகிமையாய் நடத்துவார் நீங்கள் கர்த்தரோடிருங்கள். கர்த்தர் உங்களோடு இருப்பார். அப்போது வனாந்திரத்திலே தண்ணீர்களும் கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும்.

இஸ்ரவேல் புத்திரர் – கர்த்தர் முன்னே நாம் அவர் பின்னே

தேவனே நீர் உம்முடைய ஜனங்களுக்கு முன்னே சென்று, அவாந்திர வெளியிலே நடந்து வருகையில்... தேவனே சம்பூரண மழையைப் பெய்யப்பண்ணினீர். இளைத்துப் போன உமது சுதந்தரத்தைத் திடப்படுத்தினீர். சங். 68:7-9.

மேலே உள்ள வசனங்கள் கர்த்தர் முன் செல்ல, அவரது அடிச்சுவடுகளை பார்த்து அவர் பின்னே செல்வதால் நமக்கு கிடைக்கும் ஆசீர்வாதத்தை நமக்கு சுட்டி காட்டுகிறது. தாவீது சொல்வதைக் கேளுங்கள். நாம் தேவனை பின்பற்றிச் சென்றால் சம்பூரணமான ஆசீர்வாதம் உண்டு. அதனால் தான் சம்பூரண மழையை பெய்யப்பண்ணினீர் என்கிறார். திடப்படுத்தும் தேவபெலன் நம்முடைய இளைப்படையும் நேரங்களில் நம்மை தாங்கும் என்று கூறுகிறார். நாம் இருக்கும் இடம் வனாந்திரமாய் இருந்தாலும் அவாந்திரவெளியாய் இருந்தாலும் கடுவெளியாய் இருந்தாலும் கர்த்தருக்குப் பின்செல்ல கற்றுக்கொள்வோம் அப்போது சம்பூரணமும், தேவனின் திடப்படுத்தும் பெலனும் நம்மை மூடும். அல்லேலூயா! தேவன் இந்த ஆண்டு முழுவதும் ஆவிக்குரிய சரீரப்பிரகாரமான செழிப்பால் நிரப்பி நம்மை நடத்துவாராக! ஆமென்.

---

## குடும்ப மனமகிழ்ச்சி முகாம்

இடம் : **பிரசன்ன ஆலயம், புதுக்கோட்டை**

நாள் : **16-01-2012 திங்கள் கிழமை (அரசு விடுமுறை)**

நேரம் : **காலை 10 மணி முதல் மாலை 4 வரை**

செய்தியாளர் : **சகோ.R. ஜெயக்குமார் தம்பதியினர்**

ஓசன்னா எழுப்புதல் ஊழியங்கள், நாகர்கோவில்

**சகோ. B. பொற்செல்வன் ஆசீர் தம்பதியினர்** Grace Ministries

*பதிவு கட்டணம் ரூபாய் 20 மட்டும் மதிய உணவு உண்டு*

திரு. S. நெல்சன் பொன்ராஜ் — சபை ஊழியர்

Rev. S. எட்வின் ஜெபராஜ் M.A.,B.D. — சேகர குருவானவர்



31. அவர் நமக்கு கட்டளையிட்டபடி **ஒருவரிலொருவர்** அன்பாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது (1யோவா. 3:23)
32. பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்பு கூர்ந்திருக்க, நாமும் **ஒருவரிடத்தில் ஒருவர்** அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம். (1யோவா. 4:11)
33. உங்களில் **ஒருவனும்** பிறனுக்கு அநியாயம் செய்யக்கூடாது. உன் தேவனுக்குப் பயப்பட வேண்டும். (லேவி. 25:17)
34. உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் புத்திரரோ **ஒருவரையொருவர்** கொடூரமாக ஆளக்கூடாது. (லேவி. 25:46)
35. **ஒருவருக்கொருவர்** ஒத்தாசை செய்து திடன் கொள்ளுங்கள். (ஏசா. 41:6)
36. **ஒருவனையும்** கெடுக்காமலும் கொள்ளையிடாமலும் இருங்கள். எசே. 18:7

---

**கிருபையின் ஊழியங்கள்**

## 17வது மிஷனெரி ஆலய பிரதிஷ்டை ஆராதனை

நாள் : **30-12-2011 வெள்ளிக்கிழமை காலை 11 மணி**

இடம் : **V.M.M. கார்டன், வேப்பங்குளம்**

**தர்மத்துரணி அருகில், சங்கரன்கோவில் தாலுகா**

**கர்த்தரின் கிருபையால் புதிதாக கட்டப்பட்டுள்ள மிஷனெரி ஆலயம் கிருபையின் ஆலயம் என்ற பெயரில் தேவநாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது.**

*தலைமை* : **திரு. V. ஜோபிதராஜ்** M.A.,M.Ed.,
தலைமை ஆசிரியர், (ஓய்வு), தூத்துக்குடி.

*பிரதிஷ்டைய செய்பவர்* : **Rt. Rev. Dr. S. ஜெயபால் டேவிட்**
Bishop (Rtd) C.S.I. Tirunelveli Diocese

*வாழ்த்துரை* : **தூத்துக்குடி காஸ்பல் சர்வீஸ்**
திரு. **V. மேடையாண்டி @ மனாசே** RWO, Rtd.
**Rev. J.S. ஜெபராஜ்**
பணித்தள இயக்குநர், கிருபையின் ஊழியங்கள்

**ஜெபத்துடன் குடும்பமாய் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட அன்புடன் அழைக்கிறோம்.**

---

**ஏழாயிரம்பண்ணை ஊழிய விரிவாக்க மையம் பிரதிஷ்டை**

ஜனவரி 25 புதன் காலை 10 மணிக்கு நடைபெறும் அதைத்தொடர்ந்து திறப்பின் வாயில் ஜெபம் கிருபையின் ஊழியங்களின் 25வது ஆண்டு நிறைவு ஸ்தோத்திர முகாம் நடைபெறும்! யாவரும் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

**பரிசுத்த உபவாச ஜெபம்**

ஜனவரி 25 காலை 6 மணி முதல் ஜனவரி 30 மாலை 3 மணி முடிய பரிசுத்த உபவாச முகாம் ஏழாயிரம்பண்ணை தேவனுடைய கூடாரத்தில் நடைபெறும். யாவரும் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

# தண்ணீர்களும், ஆறுகளும்

சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும். ஏசாயா 35:6

தேவன் மேலே வாசிக்கிற வசனத்தை தான் நமக்கு இந்த ஆண்டின் வாக்குத்தத்தமாக தந்துள்ளார். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராய் இருக்கிறாரே எபி. 10:23. கடந்த ஆண்டுகளில் அவர் நமக்குச் சொன்ன வாக்குத்தத்தங்களை எல்லாம் அவர் கடந்த 25 ஆண்டுகளாக நிறைவேற்றி ஆசீர்வதித்து வந்துள்ளார். அதன்மூலம் தேவன் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்த நமக்கு ஏராளமான வாய்ப்புகளை தந்துள்ளார். தேவனுக்கே மகிமை

இந்த ஆண்டிலும் தேவன் தாம் சொன்னதை நமக்குச் செய்வார். அதன் மூலம் நாம் தேவனை மகிமைப்படுத்தப்போகிறோம். அல்லேலூயா.

வனாந்திர பாதையில், கடுவெளியான பாதையில் நாம் நமக்க நேரிடும்போது கலங்க வேண்டாம் என்று நமக்கு வாக்களிக்கிறார். காரணம் அதை தண்ணீர்களாலும், ஆறுகளாலும் செழிப்பாக்குகிற தேவன் நம்மோடு இந்த ஆண்டு முழுவதும் இருப்பார். வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவு மட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதிமேல் – நம்மேல் – வைக்கப்பட்டிருக்கும். உபா. 11:12. தேவன் ஆசீர்வாதத்தை செழிப்பை, கிருபைகளை, வரங்களை, தாலந்துகளை, நன்மைகளை, ஈவுகளை தமது மகிமையை மகிழ்ச்சியை நம் மத்தியில் நமக்காக நம்மூலம் பாய்ந்தோடச் செய்வதாக வாக்குப்பண்ணுகிறார் அதை விசுவாசியுங்கள்!

இந்த வசனத்தை வாக்குத்தத்தமாக தந்த தேவனின் பாதத்தில் சில நாட்களாய் இந்த வசனத்தை தியானிக்க ஆரம்பித்தபோது தேவன் வேதத்தில் வனாந்திரப்பாதையில் கடந்து சென்ற சில நபர்களை எனக்கு வேதத்தில் ஞாபகப்படுத்தி கொண்டு வந்தார். அவைகளை ஜெபத்துடன் உங்கள் முன்பாக கொண்டு வர வாஞ்சிக்கிறேன்.

**ஆகார் - ஆவிக்குரிய பார்வை**

ஆகார் புறப்பட்டுபோய், பெயர்செபாவின் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தாள். ஆதி. 21:14 தேவன் அவளுடைய கண்களைத் திறந்தார். அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்த் துரவைக் கண்டு ஆதி. 21:19

ஆகார் மனுஷரால் கைவிடப்பட்ட நிலையில் தானும் தன் மகனுமாக வனாந்திரத்தில் அலைந்து திரிகிறாள். அவளிடம் இருந்ததோ தண்ணீர் மாத்திரமே. அதுவும் செலவழிந்து போயிற்று. இந்நிலையில் அவள் மகனுக்கு என்ன நேர்ந்ததோ தெரியாது பிள்ளை சாகிறதை நான் பார்க்க மாட்டேன் என சத்தமிட்டு அழுகிறாள். வேதம் சொல்கிறது. தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார். ஆதி. 21:17. என்பதாக. உடனடியாக ஆகாரின் ஆவிக்குரிய கண்கள் கர்த்தரால் திறக்கப்பட்டது. விசுவாசக் கண்கள் கர்த்தரால் திறக்கப்பட்டது. **அங்கே அவள் அவன் பிள்ளையின்** தாகம் தீர்க்கும் துரவை அவள் கண்கள் கண்டது.

அவளுடைய மாம்ச கண்கள் முன் கைவிடப்பட்டநிலை, மரணம், செலவழிந்து போய் ஒன்றும் இல்லை என்ற நிலை அதன் முடிவோ கண்ணீர் அழுகை. ஆனால் நமது கூப்பிடுதலுக்கு, ஜெபத்திற்கு செவி கொடுக்கும் தேவன், ஆகாரின் பிள்ளையின்



அழுகையைக் கண்டார். ஜீவன் தப்பி பிழைக்க துரவைக் கண்கள் காணச் செய்தார். நீங்களும் கலங்காது அவிசுவாசம் கொள்ளாது வனாந்திரங்கள் உங்கள் வாழ்வில் குறுக்கிடும் போது தேவனை நோக்கி கூப்பிடுங்கள். அவர் நமது வாழ்வை ஆசீர்வாத துரவை திறந்து செழிப்பாக்குவார். கண்ணீர் மாறும். அழுகை மாறும். மரணத்துக்குப் பதிலாய் ஜீவன் உண்டாகும். விசுவாசக் கண்களை, ஆவிக்குரிய கண்கணை திறந்து பாக்க வேண்டிய காலம் இது. சோர்ந்து விடாதிருங்கள்!

**இஸ்ரவேல் புத்திரர் - தேவனை நோக்கிப் பார்த்தல்**

இஸ்ரவேல் ஜனங்கள் சூர் வனாந்திரத்திற்குப் புறப்பட்டுபோய், மூன்று நாள் வனாந்திரத்தில் தண்ணீர் கிடையாமல் நடந்தார்கள். யாத். 15:22. கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார். அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே அது மதிரமான தண்ணீராயிற்று. யாத். 15:25

பார்வோனின் கடின நுகத்திலிருந்து எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டவர்கள் தேவன் செங்கடலை பிளந்து வெட்டாந்தரை வழியாய அவர்களை நடத்தி வந்தார். தொடர்ந்து பிடிக்க வந்த எகிப்தியரை தேவன் இஸ்ரவேலர்கள் கண்காண செங்கடலில் அமிழ்த்துப் போட்டார். மேகஸ்தம்பம், அக்னிஸ்தம்பம் கொண்டு தேவன் இவர்களை நடத்தினார். இப்போது இஸ்ரவேலர் சூர் வனாந்திரத்திற்கு வந்தார்கள் அங்கே அவர்களுக்கு குடிக்க தண்ணீர் இல்லை.

தண்ணீர் இல்லாமல் வனாந்திரத்தில் 3 நாட்கள் நடந்தவர்களுக்குக் கிடைத்த தண்ணீரோ கசப்பு. இப்போது தேவனின் அற்புதங்களை மறந்தார்கள். மறந்த இஸ்ரவேலர்கள் முறுமுறுத்தார்கள். யாத். 15:24. அது சூழ்நிலையை மோசமாக்கிற்று.

ஆனால் மோசே கர்த்தரை நோக்கி கூப்பிட்டான். யாத். 15:25. அப்போது கர்த்தரின் வழிகள் மோசேக்கு காட்டப்பட்டது. கசப்பான மாரா மதுரமாயிற்று.

வனாந்திர பாதையில் முறுமுறுப்பை மாற்றி கர்த்தரை நோக்கிகூப்பிடுங்கள். கசப்பை மதுரமாக மாற்றும் கர்த்தர் வனாந்திரத்தின் பாதையில் உங்களோடு இருக்கிறார் மறவாதிருங்கள்.

**இஸ்ரவேல் புத்திரர் - கர்த்தருக்கு கீழ்ப்படிதல்**

இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் கர்த்தருடைய கட்டளையின்படியே சீன் வனாந்திரத்திலிருந்து புறப்பட்டு .... அங்கே ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது. யாத். 17:1. அப்படியே மோசே இஸ்ரவேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாகச் செய்தான். யாத். 17:6

இங்கே இஸ்ரவேல் புத்திரர் சீன் வனாந்திரத்திலிருந்து எதிர்பார்ப்போடு ரெவிதீமிற்கு வந்தால் அங்கே தண்ணீர் இல்லை. தேவனை மறந்து அவர் கிரியைகளை மறந்து வாதாடினார்கள். யாத். 17:2. முறுமுறுத்தார்கள். யாத். 17:3

ஆனால் மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான். கர்த்தரிடத்திலிருந்து வார்த்தை பிறந்தது. கர்த்தர் மோசேயை நோக்கி நான் உனக்கு முன்பாகக் கன்மலையின் மேல் நிற்பேன்; நீ அந்தக் கன்மலையை அடி. யாத். 17:6 என்பதே. மோசே கீழ்ப்படிந்தான். கர்த்தர் சொன்னபடியே செய்தான். இஸ்ரவேல் புத்திரரின் வாதாடும் குணம், முறுமுறுப்பு, பரீட்சை பார்த்தல் வனாந்திரத்தில் தண்ணீரை கொண்டு வரவில்லை. ஆனால் மோசேயின் கீழ்ப்படிதல் தண்ணீரை கொண்டு வந்து செழிப்பாக்கிற்று. திருப்தியாக்கிற்று. தேவனுக்கு கீழ்ப்படியுங்கள். வனாந்திரத்திலே தண்ணீர்களும்